ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ அஞ்சனவண்ணனை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அஞ்சனவண்ணனை ॥

## கண்ணனை அன்னை கன்றின்பின் போக்கியதெண்ணி மனங்கரைந்து இரங்குதல்

‡அஞ்சன வண்ணனை⋆ ஆயர் கோலக் கொழுந்தினை⋆
மஞ்சனம் ஆட்டி⋆ மனைகள் தோறும் திரியாமே⋆
கஞ்சனைக் காய்ந்த⋆ கழலடி நோவக் கன்றின் பின்⋆
என் செயப் பிள்ளையைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே! (1)

பற்று மஞ்சள் பூசிப்⋆ பாவை மாரொடு பாடியில்⋆
சிற்றில் சிதைத்தெங்கும்⋆ தீமை செய்து திரியாமே⋆
கற்றுத் தூளியுடை⋆ வேடர் கானிடைக் கன்றின் பின்⋆
எற்றுக்கென் பிள்ளையைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே!⋆ (2)

நன் மணி மேகலை⋆ நங்கைமாரொடு நாள் தொறும்⋆
பொன்மணி மேனி⋆ புழுதியாடித் திரியாமே⋆
கல்மணி நின்றதிர்⋆ கான் அதரிடைக் கன்றின் பின்⋆
என் மணிவண்ணனைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே!⋆ (3)

வண்ணக் கருங்குழல்⋆ மாதர் வந்தலர் தூற்றிடப்⋆
பண்ணிப் பல செய்து⋆ இப் பாடி எங்கும் திரியாமே⋆
கண்ணுக்கினியானைக்⋆ கான் அதரிடைக் கன்றின் பின்⋆
எண்ணற்கரியானைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே!⋆ (4)

அவ்வவ்விடம் புக்கு⋆ அவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனாய்க்⋆
கொவ்வைக் கனிவாய் கொடுத்துக்⋆ கூழைமை செய்யாமே⋆
எவ்வும் சிலை உடை⋆ வேடர் கானிடைக் கன்றின் பின்⋆
தெய்வத் தலைவனைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே!⋆ (5)

மிடறு மெழும் எழுத்தோட⋆ வெண்ணெய் விழுங்கிப் போய்⋆
படிறு பல செய்து⋆ இப்பாடி எங்கும் திரியாமே⋆

கடிறு பல திரி⋆ கான் அதரிடைக் கன்றின் பின்⋆
　இடற என் பிள்ளையைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே!⋆ (6)

வள்ளி நுடங்கிடை⋆ மாதர் வந்தலர் தூற்றிட⋆
　துள்ளி விளையாடித்⋆ தோழரோடு திரியாமே⋆
கள்ளி உணங்கு⋆ வெங்கான் அதரிடைக் கன்றின் பின்⋆
　புள்ளின் தலைவனைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே!⋆ (7)

பன்னிரு திங்கள்⋆ வயிற்றில் கொண்ட அப் பாங்கினால்⋆
　என் இளங்கொங்கை⋆ அமுதம் ஊட்டி எடுத்து யான்⋆
பொன்னடி நோவப்⋆ புலரியே கானில் கன்றின் பின்⋆
　என் இளஞ்சிங்கத்தைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே!⋆ (8)

குடையும் செருப்பும் கொடாதே⋆
　தாமோதரனை நான்⋆
உடையும் கடியன ஊன்று⋆
　வெம் பரற்கள் உடை⋆
கடிய வெங்கானிடைக்⋆
　கால் அடி நோவக் கன்றின் பின்⋆
கொடியேன் என் பிள்ளையைப் போக்கினேன்⋆
　எல்லே பாவமே!⋆ (9)

‡என்றும் எனக்கினியானை⋆ என் மணிவண்ணனைக்⋆
　கன்றின் பின் போக்கினேன் என்று⋆ அசோதை கழறிய⋆
பொன் திகழ் மாடப்⋆ புதுவையர் கோன் பட்டன் சொல்⋆
　இன் தமிழ் மாலை வல்லவர்க்கு⋆ இடர் இல்லையே⋆ (10)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖